ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2370/32 - 2024 පෙබරවාරි මස 10 වැනි සෙනසුරාදා - 2024.02.10

2370/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: RBK/LAN/AQURE/A3/84.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 - 3/11/2016/Z/364.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 9B, யோதகம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள யோதகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடஸ்திரல் வரைபட இல. 610212, வலய இல. 02, பத்திர இல. 02 ஐ உடைய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படும் காணித் துண்டுகள்:

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: புரண அஸ்ஸெத்தும, தங்கஹமுல அஸ்ஸெத்தும; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருபவர்: டி. பி. குணபால; விஸ்தீரணம்: 0.0947 ஹெக்டயார்

2. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: புரண அஸ்ஸெத்தும, தங்கஹமுல அஸ்ஸெத்தும; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0353 ஹெக்டயார்

3. **துண்டு இல. 3**

காணியின் பெயர்: புரண அஸ்ஸெத்தும, தங்கஹமுல அஸ்ஸெத்தும; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0300 ஹெக்டயார்

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ரம்புக்கனை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2024, பெப்புருவரி 05.

EOG 02 - 0073

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MU/MLL/DS/Land/Acq/138-09.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2013/D/215.

மேற் குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 1990/45 ஆம் இலக்க 2016.10.28 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் 11-663 இன் கீழ் பிரதேச செயலாளராகிய சி. குணபாலன் அவர்களினால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிகளை அகற்றி அதற்கு பதிலாக வேறு திகதிகளை மாற்றுவதால், அந்த அறிவித்தல் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

| அகற்றப்பட வேண்டிய திகதிகள் | அகற்றப்பட வேண்டிய திகதிகளுக்குப் பதிலாக மாற்றுத் திகதிகள் |
|---|---|
| 2017, தை மாதம் 26 ஆந் திகதி | 2024, பங்குனி மாதம் 27 ஆந் திகதி |
| மு. ப. 10.00 மணி | மு. ப. 10.00 மணி |
| 2017, தை மாதம் 20 ஆந் திகதி | 2024, பங்குனி மாதம் 20 ஆந் திகதி |

எம். உமாமகள்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கரைதுறைப்பற்று,
முல்லைத்தீவு,
2024, பெப்புருவரி 06.

EOG 02 - 0074

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.